நாங்கள் எங்கள் வரலாற்றை எழுதவில்லை. பாரம்பரியம் என்பது பேச்சோடு நின்று விடுகிறது. நாங்கள் எதையுமே பேணிப்பாதுகாப்பதில்லை. மன்னன் சாஜஹான் காலையில் என்ன உணவு அருந்தினான் என்று தொடங்கி அத்தனையும் பதிவு செய்யப்பட்டன என்று ஒரு பத்திரிகையாளரான நண்பர் சொன்னார். அந்தளவு இல்லையென்றாலும் எங்கள் வாழ்வு, எங்கள் மக்கள், எங்கள் கலைஞர்கள் பற்றிய தகவல்கள் சேகரிக்கப்படவேண்டும். பதிவு செய்யப்படவேண்டும்.

இந்த நோக்குடன் “தாய்வீடு” பத்திரிகை எங்கள் ஈழத்து மண்ணின் கிராமங்களில், ஊர்களில் வாழ்ந்த பிரபலமடைந்தவர்களுடன், தெரியப்படாமல் போய்விட்ட எங்கள் கலைஞர்களைப் பற்றியும் எழுதும்படி வேண்டுகோள் விடுக்கிறது. கட்டுரைகளை சுருக்கமாக, எழுதி அனுப்புங்கள். களம், ‘தாய்வீடு’ தரக் காத்திருக்கிறது. கருத்து உங்களுடையது. கட்டுரைகளை செதுக்கி சொற்சித்திரங்களாக்கும் பொறுப்பு எங்களுடையது.

*K.S. பாலச்சந்திரன்*

## இது ஓர் ஈழத்துக் கலைஞர்களின் பதிவுத் தொடர்...

**ஆழத்து முத்துக்கள் 06**

# நடிகமணி வி.வி. வைரமுத்து

**‘சோக்கல்லோ’ சண்முகநாதன்**

வி. வி. வைரமுத்து (பெப்ரவரி 11, 1924 - ஜூலை 8, 1989) இலங்கையின் மிகச்சிறந்த இசை நாடகக் கலைஞராகக் கருதப்படுபவர். இவர் அரிச்சந்திரனாகத் தோன்றி நடித்த ‘மயான காண்டம்’ எண்ணற்ற தடவைகள் மேடையேற்றப்பட்ட இசை நாடகமாகும். தனது இனிய குரல் வளத்தால் பாடி, உருக்கமாக வசனங்கள் பேசி நடிப்பதில் வல்லவராகத் திகழ்ந்தார்.

சிறந்த நாடக நெறியாளரான இவர் கலைப் பணி மீது கொண்ட பற்றால் தான் பணி புரிந்து வந்த ஆசிரியத் தொழிலைத் துறந்து ‘வசந்தகான சபா’’ என்னும் நாடக மன்றத்தை ஆரம்பித்து சரித்திர புராண இதிகாச நாடகங்களை நடித்து மக்கள் மனங்களில் பதிய வைத்திருந்தார்.

இலங்கை வானொலியில் பல இசை நாடகங்களை வழங்கியவர். மிருதங்கம், ஆர்மோனியம், வயலின், ஜலதங்கரம் போன்ற இசைக்கருவிகளை இசைப்பதிலும் வல்லவராய் இருந்ததோடு இலங்கை வானொலியில் கர்நாடக இசைக் கச்சேரிகளும் செய்திருக்கின்றார். இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் தனது பவளவிழாவின் போது இவர் பாடி நடித்த ‘நந்தனார்’ இசை நாடகத்தை ஒலிப்பதிவு செய்து இறுவட்டாக வெளியிட்டார்கள்.

நடிகமணி வைரமுத்து பாடத்தொடங்க அழுத பிள்ளை வாய்மூடும். அப்படி அந்த குரலில் ஒரு ராஜ கம்பீரம் இருந்தது. தானே ஹார்மோனியத்தை இசைத்தபடி பாடத்தொடங்க, சபையில் ஒரு அமைதி நிலவும்.



இவரது நல்ல நண்பர்களில் ஒருவர் அக்காலத்தில் மணியகாரன் என்று அழைக்கப் பெற்ற எழுத்தாளர் சிவஞானசுந்தரம் (இலங்கையர்கோன்). இவர்தான் வைரமுத்து அவர்களின் நாடக மன்றத்திற்கு “வசந்த கானசபா” என்று பெயரிட்டவர். நடிகமணி வைரமுத்துவின் புகழ்பூத்த மயான காண்டம் நாடகத்தை கல்முனை உட்பட பல இடங்களில் மேடையேற உதவியவர் இலங்கையர் கோன். வசந்தகான சபா நாடக தொடக்கத்தில் “ஐயாவே...” என்ற ஒரு பாடல் வரும். அது இலங்கையர்கோனைக் கௌரவிப்பதற்கான பாடல்

கலைஞர் ஏ. ரகுநாதன் தயாரித்த நிர்மலா திரைப்படத்தில் இவரது ‘மயானகாண்டம்’ இசை நாடகத்தின் பகுதியும் இணைக்கப்பட்டது. அறிஞர் காரை சுந்தரம்பிள்ளை இவர் பற்றிய ஆய்வு நூலாக ‘நடிகமணி வி.வி. வைரமுத்து வாழ்வும் அரங்கும்’ என்ற நூலை எழுதியுள்ளார்.

கலையரசு சொர்ணலிங்கம் இவருக்கு ‘நடிக மணி’ என்னும் பட்டத்தை வழங்கிக் கௌரவித்திருந்தார். பேராசிரியர் கா. சிவத்தம்பி எழுதிய ‘நாடக தீபம்’ என்னும் நூலில் தமிழ் நாடகத்தின் ‘மரணிக்காத குரல்’ என்று வைரமுத்து அவர்களுக்கு புகழாரம் சூட்டியிருக்கின்றார். பேராசிரியர் சு. வித்தியானந்தன் ‘கலைக் கோமான்’ என்னும் விருதையும் பேராசிரியர் க. கைலாசபதி ‘நவரச திலகம்’ என்னும் விருதையும், வழங்கி கௌரவப் படுத்தியிருக்கின்றார்கள். யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் 2004 ஆம் ஆண்டில் இவருக்கு ‘கலாநிதி’ பட்டத்தை வழங்கி கௌரவித்திருந்தது.

நடிகமணி வைரமுத்துவின் இசை நாடகங்களில் பக்த நந்தனாரும் ஒன்று. இந்த நாடகத்தை வானொலிக்காக வடிவமைத்தவர், வைரமுத்துவின் இன்னுமொரு நல்ல நண்பரான கே.எம்.வாசகர். இவர் இலங்கை வானொலியில் நாடகத்தயாரிப்பாளராக இருந்தவர். வைரமுத்துவுடன் வி.மார்க்கண்டு, சிதம்பரம், செல்வராஜா, ஐயாத்துரை போன்ற நல்ல நடிகர்கள் இணைந்து நடித்துவந்தார்கள்.

நடிகமணி வைரமுத்து ஏழாலை மயிலங்காட்டைச் சேர்ந்தவரா, மல்லாகம் கோட்டைக்காட்டைச் சேர்ந்தவரா அல்லது காங்கேசன்துறையைச் சேர்ந்தவரா என்ற வாதம் நடந்துகொண்டிருக்கிறது. அவர் மூன்று இடத்திலும் வாழ்ந்திருக்கிறார். உலகத்துக்குச் சொந்தமான ஒருவரை நாங்கள் ஏன் குறுகிய எல்லையுள் அடைக்க வேண்டும். நடிகமணி வைரமுத்து அவர்கள் பக்த நந்தனார் இசைநாடக ஒலிப்பதிவுக்கு கொழும்பு வந்தபோது அங்கு அமரரானார்.

உசாத்துணை:
விக்கிபீடியா-
கட்டற்றகலைக்களஞ்சியம்)



sanmuganathan@thaiveedu.com

■ ■ ■

கலைஞர்கள் பற்றிய விபரங்களையும் அவர்களுடைய புகைப்படங்களுடன் உங்களுடைய பெயர், தொலைபேசி இலக்கம், புகைப்படம் மற்றும் மின்னஞ்சல் முகவரியையும் தாய்வீட்டிற்கு அனுப்பிவையுங்கள்.

**Editor**
**P.O.Box #63581**
**Woodside Square**
**1571 Sandhurst Cir.**
**Toronto, ON. M1V 1V0**

**Fax : 416.849.0594**
**E-mail : info@thaiveedu.com**

■ ■ ■

www.thaiveedu.com